**கவனிக்க** .- *2015.01.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1897 - 2015 ජනවාරි මස 09 වැනි සිකුරාදා - 2015.01.09**

*1897 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 164 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 170 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, சனவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## வடமேல் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

*1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மற்றும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவு சங்க (திருத்தச்) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவு சங்க சட்டத்தின் 57 ஆம் பிரிவில் 2 ஆம் உப பிரிவின்படி கொடுக்கல் வாங்கலை மூடிவிடல்.*

கீழ் காணப்படும் கூட்டுறவு சங்கம் அந்த சங்கங்களின் பெயர் முன்னிலையில் காட்டப்பட்டுள்ள திகதிகளில் கொடுக்கல், வாங்கல் மூடப்பட்டுவிட்டது பற்றி 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவு சங்க சட்டத்தின் 57 (2) ஆம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. எம். கே. சி. திசாநாயக,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/
பதிவாளர்,
வடமேல் மாகாண மாகாணம்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
முதலாம் மாடி,
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2014, நவெம்பர் 26.

### அட்டவணை

| தொடர் இலக்கம் | முன்பிருந்த பதிவு இலக்கம் | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| | | **குருநாகல் பிரிவு** | | |
| 1 | வப/கு/113 | ம/பட்ட கவிசிகமுவ சுவசக்தி கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச்சங்கம் | 2013.11.09 | குருநாகல் |
| 2 | கு/1688 | ம/படாத கொடிகாபொல சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2013.11.09 | குருநாகல் |
| 3 | கு/1953 | ம/பட்ட வேவணவெடிய எகமுது சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2013.11.09 | குருநாகல் |
| 4 | கு/1989 | ம/பட்ட மில்லவ சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2013.11.09 | குருநாகல் |
| 5 | வப/கு/55 | ம/பட்ட கடுவலந்த ஹெவனதென்ன கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2013.12.18 | குருநாகல் |
| 6 | கு/1847 | ம/படாத கனவ பொதுவில பகுதி சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2013.12.31 | குருநாகல் |
| 7 | கு/1950 | ம/பட்ட பாதெணிய சுனன்த மஹா வித்தியால பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.01.06 | குருநாகல் |
| 8 | கு/1704 | ம/படாத ஹெட்டிகெதர சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.01.06 | குருநாகல் |
| 9 | வப/கு/133 | ம/பட்ட பன்கொல்ல கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2013.12.30 | குருநாகல் |
| 10 | வப/கு/88 | ம/பட்ட மெதகெதர கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2013.12.31 | குருநாகல் |
| 11 | வப/கு/1469 | ம/பட்ட வல்பொல உற்பத்தி குடியிருப்பு கூட்டுறவுச் சங்கம் | 2013.12.30 | குருநாகல் |

| தொடர் இலக்கம் | முன்பிருந்த பதிவு இலக்கம் | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 12 | வப/கு/239 | ம/பட்ட ஹெவனதென்ன கொலனிய கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2013.12.26 | குருநாகல் |
| 13 | கு/132 | ம/பட்ட சமங்கி கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2013.12.26 | குருநாகல் |
| 14 | வப/கு/523 | ம/பட்ட மீவெவ தங்கொல்ல தேசிய உற்பத்திகளை பாதுகாக்கும் மற்றும் முதலீட்டாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2014.02.05 | குருநாகல் |
| 15 | வப/கு/22 | ம/பட்ட பதல்பார கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.02.05 | குருநாகல் |
| 16 | வப/கு/81 | ம/பட்ட மெடியகனெ கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.03.03 | குருநாகல் |
| 17 | வப/கு/60 | ம/பட்ட ஹன்தானாகம கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.03.05 | குருநாகல் |
| 18 | வப/கு/211 | ம/பட்ட கல்கமுவ இலக்கம் 8 உதுருவீர கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2013.03.14 | குருநாகல் |
| 19 | கு/1818 | ம/படாத நிகவெஹெர தொம்பகமுவ சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2013.03.14 | குருநாகல் |
| 20 | வப/கு/500 | ம/பட்ட நாவின்ன விவசாய உற்பத்தி குடியிருப்பு கூட்டுறவுச் சங்கம் | 2014.04.08 | குருநாகல் |
| 21 | வப/கு/254 | ம/பட்ட கம்முத்தாகெதர தாரக கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.04.08 | குருநாகல் |
| 22 | வப/கு/1174 | ம/பட்ட வில்கமுவ சக்தி கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.04.08 | குருநாகல் |
| 23 | வப/கு/145 | ம/பட்ட இம்புல்கொடயாகம கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.04.08 | குருநாகல் |
| 24 | கு/2071 | ம/பட்ட லாஹிரு மகுல்பொத மஹா வித்தியால பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 25 | வப/கு/92 | ம/பட்ட வாரியபொல தேசிய வைத்திய கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 26 | வப/கு/99 | ம/பட்ட பங்டிபொல கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 27 | வப/கு/209 | ம/பட்ட கொபல்லவ கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 28 | வப/கு/75 | ம/பட்ட வேத்தேவ கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 29 | வப/கு/14 | ம/பட்ட டிஹல நாகலகமுவ சுவசக்தி அமைப்பின் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 30 | கு/294 | ம/பட்ட திவுலகஸ்பிடிய சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 31 | - | ம/பட்ட வாரியபொல தேர்தல் தொகுதியின் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |

| தொடர் இலக்கம் | முன்பிருந்த பதிவு இலக்கம் | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 32 | - | ம/பட்ட கனேவத்த தென்னை உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச்சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 33 | வப/கு/205 | ம/பட்ட திஸ்சவ ஐக்கிய பால் உற்பத்தியாளர்களின் கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 34 | வப/கு/523 | ம/பட்ட மீவெவ தங்கொல்ல தேசிய உற்பத்தியாளர்களின் மற்றும் நலன்புரி முதலீட்டு கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 35 | வப/கு/02 | ம/பட்ட கொடவெஹெர மீகஸ்வெவ பிரகதி கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 36 | வப/கு/204 | ம/பட்ட உற்சவ கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 37 | வப/கு/267 | ம/பட்ட வெவ இஹல கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 38 | வப/கு/சு/6 | ம/பட்ட மெல்சிரிபுர தென்னை உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 39 | கு/1803 | ம/பட்ட இங்ஹல திம்பிரியாவ சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 40 | வப/கு/1518 | ம/பட்ட தொடங்கஸ்லந்த மஹா வித்தியாலயத்தின் பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 41 | கே/31 | ம/பட்ட கொலம்பலாமுல்ல சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | குருநாகல் |
| 42 | வப/குரு/28 | ம/பட்ட நிககொல்ல கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.12 | குருநாகல் |
| 43 | வப/குரு/03 | ம/பட்ட குதும்புவ சுவசக்தி அமைப்பின் கூட்டுறவுச் சங்கம் | 2014.06.27 | குருநாகல் |
| 44 | வப/கு/255 | ம/பட்ட நேடிய கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.07.08 | குருநாகல் |
| 45 | வப/கு/159 | ம/பட்ட மகுலேவ கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.07.08 | குருநாகல் |
| 46 | வப/கு/29 | ம/பட்ட கெரெவ்வெவ கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.07.08 | குருநாகல் |
| 47 | வப/கு/1696 | ம/படாத கலகெதரகம சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.07.11 | குருநாகல் |
| 48 | வப/கு/48 | ம/பட்ட பானகடுவ கலுபுலத் உற்பத்தியாளர்களின் கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.07.21 | குருநாகல் |
| 49 | வப/கு/234 | ம/பட்ட நவதல்வத்த கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.07.22 | குருநாகல் |
| 50 | KUSS/55 | ம/பட்ட ரங்கல்லேபொல பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.07.22 | குருநாகல் |
| 51 | வப/கு/513 | ம/பட்ட மினுவன்கெடே வல்பாலுவ வந்துரெஸ்ச வெல்கால விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.07.22 | குருநாகல் |

| தொடர் இலக்கம் | முன்பிருந்த பதிவு இலக்கம் | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 52 | வப/கு/189 | ம/பட்ட திசாகும்புர கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.07.22 | குருநாகல் |
| 53 | வப/கு/59 | ம/பட்ட வேரகல கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.07.22 | குருநாகல் |
| 54 | கு/2001 | ம/பட்ட மெதின்னோருவ பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.08.19 | குருநாகல் |
| 55 | வப/கு/290 | ம/பட்ட வெல்லவ பால் உற்பத்தியாளர்களின் பிராதமிக கூட்டுறவுச் சங்கம் | 2014.08.23 | குருநாகல் |
| 56 | கு/2011 | ம/பட்ட அதரகல்ல பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.08.23 | குருநாகல் |
| 57 | வப/கு/13 | ம/பட்ட அளவ்வ கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.08.23 | குருநாகல் |
| 58 | வப/கு/18 | ம/பட்ட நைலிய சங்கி சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.08.23 | குருநாகல் |
| 59 | வப/கு/221 | ம/பட்ட இந்துல்கொடகந்த மகளிர் சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.08.23 | குருநாகல் |
| 60 | வப/கு/541 | ம/பட்ட வாடியகொட பொது கூட்டமைப்பு அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.10.09 | குருநாகல் |
| 61 | கு/2043 | ம/பட்ட கோருவெவ மஹா வித்தியாலய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.10.09 | குருநாகல் |
| 62 | கு/1802 | ம/பட்ட கொஹிலகெதர சகசுருவம் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.10.09 | குருநாகல் |
| 63 | கு/1695 | ம/படாத தோரயாய சகசுருவம் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.10.09 | குருநாகல் |
| 64 | வப/கு/91 | ம/பட்ட தீபாலோக கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 65 | வப/கு/265 | ம/பட்ட பொன்னிலவ கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 66 | வப/கு/262 | ம/பட்ட இஹல முதுகமுவ கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 67 | வப/கு/224 | ம/பட்ட கடுபொத ஐக்கிய கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 68 | வப/கு/243 | ம/பட்ட மொரகொல்லாகம மாபேகமுவ கிராமிய அபிவிருத்தி கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 69 | குறி/309 | ம/பட்ட நாதகனே பால் உற்பத்தியாளர்களின் பிராதமிக கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 70 | வப/கு/154 | ம/பட்ட நிதலவ கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |

| தொடர் இலக்கம் | முன்பிருந்த பதிவு இலக்கம் | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 71 | வப/கு/517 | ம/பட்ட மொரகொல்ல சத்கார சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 72 | வப/கு/தம்ப/101 | ம/பட்ட மயுரபாத கனிஷ்ட வித்தியாலயத்தின் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 73 | வப/கு/516 | ம/பட்ட மரவள்ளி மற்றும் ஊடு பயிர் செய்வோரின் கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 74 | வப/கு/235 | ம/பட பெபிலபிடிய கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 75 | கு/1998 | ம/பட்ட மொன்னேகுலம மஹா வித்தியால பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.10.17 | குருநாகல் |
| 76 | கு/ரஸ்-1 | ம/பட்ட குரவிகுலம சகசுருவம் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.10.20 | குருநாகல் |
| 77 | கு/1679 | ம/படாத அக்போவ சகசுருவம் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.10.20 | குருநாகல் |
| 78 | வப/கு/253 | ம/பட்ட ஹிந்தவ கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.10.20 | குருநாகல் |
| | | **குளியாப்பிட்டி பிரிவு** | | |
| 79 | வப/கு/பி/03 | ம/பட்ட நிஜபிம சுவசக்தி அமைப்பின் சியம்பலாகஸ்வெடிய கூட்டுறவுச் சங்கம் | 2013.10.24 | குருநாகல் |
| 80 | குளி/197 | ம/பட்ட கடுகம்பல மெதபத்து கிழக்கு பிரிவின் விவசாய பொருட்கள் தயாரிப்பாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2013.11.27 | குருநாகல் |
| 81 | குளி/779 | ம/பட்ட என்னருவ சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2013.11.29 | குருநாகல் |
| 82 | குளி/பாடசாலை/191 | ம/பட்ட உடுபத்தாவ தர்மானந்த மஹா வித்தியால பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2013.12.18 | குருநாகல் |
| 83 | கு/2062 | ம/பட்ட தாவல்ல தம்மாலோக பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.02.06 | குருநாகல் |
| 84 | வப/குரு/ஹெ/ப/01 | ம/பட்ட நாகொல்லாகொட மஹா வித்தியாலய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.03.05 | குருநாகல் |
| 85 | குளி/157 | ம/பட்ட பிபலதெனிய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.03.25 | குருநாகல் |
| 86 | வப/குளி/49 | ம/பட்ட குளியாபிட்டிய பிரதேச மின்சார பொறியியலாளர் பிரிவின் உடன்படிக்கையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப சேவை சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.06.02 | குருநாகல் |
| 87 | வப/குளி/84 | ம/பட்ட கந்தயாய சத்கார்ய சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.10.01 | குருநாகல் |
| 88 | KUSS/171 | ம/பட்ட கல்லெஹெமுல்ல அரச பாடநெறியின் பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.10.28 | குருநாகல் |

| தொடர் இலக்கம் | முன்பிருந்த பதிவு இலக்கம் | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| | | **சிலாபம் பிரிவு** | | |
| 89 | சிலா/674 | ம/பட்ட தும்மலதெனிய லங்சிகம மீனவ கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 90 | சிலா/359 | ம/பட்ட தும்மல கொடுவ அரச வித்தியாலய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 91 | சிலா/382 | ம/பட்ட கரவிட இலிப்பதெனிய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 92 | சிலா/767 | ம/பட்ட சாந்த மாடின் பொரஸ்த பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 93 | சிலா/678 | ம/பட்ட கடுனேரிய தொன் ரோகுஸ் கசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 94 | சிலா/629 | ம/பட்டப முதலக்குளிய பால் உற்பத்தியாளர்களின் பிராதமிக கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 95 | சிலா/543 | ம/படாத மேற்கு கிரிமெடியான சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 96 | சிலா/761 | ம/படாத பெருக்குவடவன சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச்சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 97 | சிலா/சிஎச்/105 | ம/பட்ட உடப்புவ தும்பு கைத்தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 98 | சிலா/592 | ம/படாத பொன்தன்திவு சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச்சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 99 | சிலா/903 | ம/பட்ட கருக்குவடவன திரிய பெரட சத்கார்ய சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 100 | சிலா/NWP/CH/AC/918 | ம/பட்டவேலுசுமனபுர புபுது சத்கார்ய சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 101 | - | ம/பட்ட மாம்புரி மீனவ கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 102 | சிலா/655 | ம/பட்ட அலுத்வத்த மீனவ கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 103 | சிலா/NWP/CH/AC/972 | ம/பட்ட சாந்த அந்தோனி சத்கார்ய சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 104 | சிலா/659 | ம/பட்ட மெதஉல்ஹிடியாவ கடவத மீனவ கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |

| தொடர் இலக்கம் | முன்பிருந்த பதிவு இலக்கம் | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 105 | வம/பு/கூ/1 | ம/பட்ட பொன்னன்குளம நந்தமித்திர சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 106 | சிலா/490 | ம/பட்ட எலவிடிய குமாரகட்டுவ கிராம சேவை உத்தியோகப் பிரிவின் சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 107 | சிலா/644 | ம/படாத மஹவிலத்தவ கெமுனு சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச்சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 108 | சிலா/612 | ம/படாத தென் உல்ஹிடியாவ திலிணி சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச்சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 109 | சிலா/461 | ம/படாத முகுணுவடவன பால் உற்பத்தியாளர்களின் ஆரம்ப கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 110 | NWP/CH/AC/917 | ம/பட்ட மொரகெலே மகளிர் சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 111 | சிலா/904 | ம/பட்ட தெதுருஓய மணல் மேடையிடுபவர்களின் மற்றும் கொண்டு செல்பவர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 112 | சிலா/816 | ம/பட்ட சிலாப சாந்த மரியா மஹா வித்தியாலய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 113 | சிலா/715 | ம/பட்ட கரம்ப மீனவ கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 114 | சிலா/600 | ம/பட்ட கொக்வலமுல்ல வீரஹேன சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.05.02 | சிலாபம் |
| 115 | சிலா/607 | ம/பட்ட புபுது குடியிருப்பாளர்களின் சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.06.02 | சிலாபம் |
| 116 | சிலா/558 | ம/பட்ட சுரக்குலம சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல், வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | 2014.08.28 | சிலாபம் |

01-274

# துணை விதிகள்

**மேல் மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின்கீழ் பிரசுரிக்கப்படும் அறிவித்தல்*

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 (14அ) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 153 ஆவது பிரிவினால் கொலன்னாவ நகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க அந்நகர சபையினால் தயாரிக்கப்பட்ட இங்கு கீழே காணப்படும் துணை விதி 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தில் 04.01 ஆம் இலக்க

பிரேரணையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபையின் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேலே கூறப்பட்ட (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவிற்கு இணங்க இத்துணைவிதி மேல் மாகாணத்தின் முதலமைச்சரும் மற்றும் நிதி திட்டமிடல், சட்டம் ஒழுங்கு காணி கல்வி உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம் மனிதவலு, மற்றும் தொழில்துறை பொறியியல் மற்றும் தகவல் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டது என்பது இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரசன்ன ரணதுங்க,
மேல் மாகாணத்தின் முதலமைச்சரும் மற்றும் நிதித் திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிர்வாகம், மனிதவலு, மற்றும் தொழில்துறை,
பொறியியல் சேவை மற்றும் தகவல் அமைச்சரும்.

மேல் மாகாண முதலமைச்சு அலுவலகம்,
சிராவஸ்தி மந்திரய,
கொழும்பு 07,
2014, நவெம்பர் 20.

## கொலன்னாவ நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வாடகைக்கு அமர்த்தும் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல் தொடர்பான துணை விதி

1. இத்துணை விதி கொலன்னாவ நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வாடகைக்கு அமர்த்தும் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல் பற்றிய துணை விதி என எடுத்துக்காட்டப்படும். குறுந்தலைப்பு

2. இத்துணை விதி கொலன்னாவ நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வாடகைக்கு அமர்த்தும் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தலை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டணங்கள் அறவிடுதல் பற்றிய துணை விதி ஆகும். நீண்ட பெயர்.

3. (1) இதன் பின்பு "கட்டுப்பாட்டுக் குழு" என அழைக்கப்படும் முதலாவது அட்டவணை 1 ஆவது பகுதியில் குறிப்பிடப்பட்ட ஆட்களைக்கொண்ட கொலன்னாவ நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களைக் கட்டுப்படுத்தல் பற்றிய குழுவொன்றாதல் வேண்டும். கட்டுப்பாட்டுக் குழு.

(2) குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் கட்டுப்பாட்டுக்குழுவின் கூட்டம் நடத்தப்படல் வேண்டுமென்பதொடு, நகரசபையின் தலைவர் உகந்ததெனக் கருதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்டுப்பாட்டுச் சபையின் விஷேட கூட்டமொன்றை நடத்த இயலும்.

(3) கட்டுப்பாட்டுக்குழுக் கூட்டத்திற்கு நான்கு தினங்களுக்கு முன்னரேனும் அழைப்பு அறிவித்தல் அங்கத்தவர்களுக்கு கிடைக்கப்பெறச் செய்தல் தலைவரின் பணியாகும்.

(4) கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் பற்றிய அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டுமென்பதோடு, அவை கட்டுப்பாட்டுக் குழுவின் விதப்புரை தொடர்பாக சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(5) கட்டுப்பாட்டுக் குழுவின் கூட்டநடப்பெண் உறுப்பினர் எண்ணிக்கையின் மூன்றில் ஒன்றாதல் வேண்டும்.

(6) முதலாவது அட்டவணையில் II ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் கட்டுப்பாட்டுக் குழுவின் பணிகளாதல் வேண்டும்.

(7) கட்டுப்பாட்டுக் குழுவின் கூட்டங்களில் தலைமை தாங்கல் நகர சபைத் தலைவர் அவரால் ஏற்கப்படல் வேண்டும்.

(8) நகர சபையின் செயலாளர் கட்டுப்பாட்டுக் குழுவின் செயலாளராதல் வேண்டும்.

4. (1) இத்துணைவிதியின் இரண்டாவது அட்டவணையில் I ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் இங்கு இதன் பின்னர் "நிறுத்தி வைக்கும் இடங்கள்" என அறிமுகப்படுத்துகின்ற வாடகை முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கும் இடங்களாகப் பாவிப்பதற்கும், இடமளிப்பதற்கும். மேற்படி உப அட்டவணையில் II ஆவது பிரிவில் ஒவ்வொரு நிறுத்தி வைக்கும் இடத்திற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள உச்ச எண்ணிக்கைக்கு சமமான வாடகை முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை, அத்தகைய நிறுத்தி வைக்கும் இடத்தில் நிறுத்தி வைப்பதற்கு இடமளித்ததால் என்பவை சட்டமுறையாதல் வேண்டும். நிறுத்தி வைக்கும் இடங்கள்.

(2) கட்டுப்பாட்டுக் குழுவின் விதப்புரைகளுக்கு அமைய சபையின் பிரேரணையொன்றின் அங்கீகாரம் ஒன்றின் மூலம் இரண்டாவது அட்டவணையின் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுத்தி வைக்கும் இடங்கள் மற்றும் II ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்கூடிய எண்ணிக்கை தொடர்பாக தீர்மானித்தல் சபை மூலம் காலத்திற்கு காலம் மேற்கொள்ள இயலும்.

(3) துணை விதியில் ஏதாவது திருத்தம் ஒன்று தேவைப்பட்டால் அது கட்டுப்பாட்டுக் குழுவின் விதப்புரையின்கீழ் சபையின் பிரேரணை ஒன்றினை நிறைவேற்றிய பின் மேற்கொள்ள இயலும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மாற்றங்கள் அல்லது அகற்றல்கள் வர்த்தமானப் பத்திரிகை மூலம் அறிவித்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய அறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து அல்லது அத்தகைய அறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள முன்னைய தினத்தில் இருந்து அமுலுக்கு வருதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு நிறுத்தி வைக்கும் இடத்திலும் நிறுத்தி வைக்கக்கூடிய ஆகக்கூடிய வாடகை முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை, தொடர்புடைய நிறுத்தி வைக்கும் இடத்தில் தெளிவாகத் தெரியும் வகையில் அறிவித்தல் பலகையொன்றை மூன்று மொழிகளிலும் பார்வைக்கு வைத்தல் சபையின் செயலாளரின் பணியாதல் வேண்டும்.

(5) ஒவ்வொரு நிறுத்தி வைக்கும் இடத்திலும் நிறுத்தி வைக்கக்கூடிய ஆகக்கூடிய வாடகை முச்சக்கர வண்டிகள், நிறுத்தி வைக்கும் ஒழுங்கு முறை என்பன கட்டுப்பாட்டுக் குழுவினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்க முடியும். கட்டுப்பாட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்படும் நிறுத்தி வைக்கும் ஒழுங்கு முறையைக் காட்டும் இடங்களை ஒதுக்குதல், 4 அங்குல அகலமுள்ள வெள்ளை அல்லது மஞ்சள் நிறக் கோடுகள் மூலம் அடையாளம் இடுதல் சபையின் செயலாளரின் பணியாதல் வேண்டும்.

5. (1) சபையின் செயலாளர் மூலம் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிபத்திரமின்றி எந்தவொரு நிறுத்தி வைக்கும் இடத்திலும் வாடகை முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி வைத்தல் கூடாது.

(2) ஏதேனும் வாடகை முச்சக்கர வண்டிக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் நிலையாக குறிப்பிடப்பட்டுள்ள நிறுத்தி வைக்கும் இடத்தைத் தவிர்ந்த வேறு எந்தவொரு நிறுத்தி வைக்கும் இடத்திலும் நிறுத்தி வைத்தல் கூடாது.

(3) ஏதேனுமொரு வாடகை முச்சக்கர வண்டி வாடகைப் பயணமொன்றை எதிர்பார்த்து நிறுத்தி வைக்கும் இடம் அல்லாத பிரபல்யமான இடமொன்றில் நிறுத்தி வைத்தல் ஆகாது.

(4) வேறு ஏதேனும் மோட்டார் வாகனம் அல்லது மோட்டார் வாகனம் அல்லாத வேறு வாகனமொன்றை எந்தவோர் நிறுத்தி வைக்கும் இடத்தில் நிறுத்தி வைப்பது இடம்பெறக் கூடாது.

6. (1) ஏதாவது நிறுத்தப்படும் இடமொன்றிற்கு உள்வரும் அல்லது வெளியேறும் வாடகை முச்சக்கர வண்டிக்கு இடையூறு ஏற்படுமாறு ஏதாவதொரு மோட்டார் வாகனம் ஒன்றை அல்லது மோட்டார் வாகனம் ஒன்று அல்லாத வேறு வாகனம் ஒன்றை நிறுத்தி வைக்கப்படலாகாது.

(2) ஏதாவதொரு வாடகை முச்சக்கர வண்டி நிறுத்தப்படும் இடத்திலிருந்து அகற்றப்படும் விடயமொன்றுக்கு உரியதாக எந்தவொரு சிறிய பழுதுபார்ப்பு ஒன்றினைத் தவிர வேறு எந்தவொரு பழுதுபார்ப்பு நடவடிக்கையை அந்நிறுத்தப்படும் இடத்தினுள் மேற்கொள்ளக்கூடாது.

(3) எந்தவொரு நபரினாலோ ஏதாவது நிறுத்தப்படும் இடமொன்றில் வாடகை முச்சக்கர வண்டி ஒன்று அல்லது வேறு ஏதாவது வகையான மோட்டார் வாகனம் ஒன்றை கழுவுவது அல்லது கழுவ திட்டமிடுவது மேற்கொள்ளக்கூடாது.

(4) அனுமதிப்பத்திரம் ஒன்று உள்ள வாடகை முச்சக்கர வண்டி நிறுத்தப்படும் இடத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் வேளையில் அவ்வண்டியின் பொறுப்பாளர், வாடகை வண்டியில் பயணம் செய்ய வருகின்றவர், அவ்வண்டியின் சிறிய பழுதுபார்ப்பு நடவடிக்கைக்காக வரவழைக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர் அல்லது வேறு ஏதாவது நபர் ஒருவர் முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் அத்துடன் பொது மக்களின் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுமாறு நிறுத்தப்படும் இடத்தில் உலாவுதல் கூடாது.

(5) ஏதாவதொரு வாகனத் தரிப்பிடம் ஒன்றில் ஏதாவது நபர் ஒருவரினால் நஞ்சுப் போதைப்பொருள் அல்லது மதுபானம் என்பன பாவிக்கப்படக்கூடாது என்பதுடன், ஒழுக்கமற்ற, நடத்தை அல்லது ஏதாவதொரு பாதகமான செயற்பாட்டில் ஈடுபடுவது இடம்பெறக்கூடாது.

(6) ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியினாலும் தம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரத்தை உரிய முச்சக்கர வண்டியின் முன் பக்கத்தில் உள்ள கண்ணாடியில் தெளிவாகத் தெரியக்கூடிய முறையில் காட்சிப்படுத்தப்படவேண்டும்.

(7) ஒவ்வொரு முச்சக்கர வண்டியின் சாரதியும், உரிய நாகரிகமான உடை அணிந்து இருத்தல் வேண்டும்.

(8) ஒவ்வொரு முச்சக்கர வண்டி சாரதியினாலும், முச்சக்கர வண்டிகளின் தரிப்பிடம் சுத்தமானதாக பேணப்பட வேண்டும்.

7. (1) ஏதேனுமொரு நிறுத்தி வைக்கும் இடத்தில் வாடகை முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி வைக்க நினைக்கின்ற எவரேனும் ஒருவர், இங்கு மூன்றாவது அட்டவணைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட நகர சபையினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பத்திரமொன்றை, அதன் மூலம் கேட்கப்பட்ட பின்னிணைப்புடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தல்.

(2) அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள எண்ணும் முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கு உரிய முச்சக்கர வண்டிச் சங்கத்தின் தவிசாளர் அத்துடன் செயலாளர் அல்லது பொருளாளரினால் விதப்புரை செய்து இங்கு மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கையொப்பம் இட்ட பின்னர் மட்டுமே விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) விண்ணப்பப் படிவக் கட்டணம் இருபத்து ஐந்து (25 ரூபா) ஆகும். சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதன் மூலம் நகர சபையினால் விண்ணப்பப்படிவக் கட்டணம் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படலாம். நகர சபையினால் அவ்வாறு தீர்மானிக்கப்படும் விண்ணப்பப்படிவக் கட்டணம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட வேண்டியதுடன் அவ் அறிவிப்பு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து அல்லது அவ் அறிவிப்பில் உறுதியாகக் குறிப்பிடப்படும் எதிர்வரும் தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(4) அனுமதிப்பத்திரமொன்றுக்கு வேண்டுகோள் விடுத்து சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்று கிடைக்கப்பெற்ற பின்னர் ஏழு நாட்களுக்குள் சபையின் தவிசாளரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது நான்காவது அட்டவணையில் I ஆவது பகுதியின் ஏற்பாடுகளின் கீழ் நான்காவது அட்டவணையின் II ஆவது பகுதிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட இயலும்.

(5) இத்துணை விதிகளின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படும் ஏதாவது அனுமதிப்பத்திரம் ஒன்று முன்னரே இரத்து செய்யப்படாவிட்டால் ஒழிய அவ்வனுமதிப்பத்திரம் -

(i) ஆறு மாதத்துக்குரிய அனுமதிப்பத்திரம் ஒன்றாயின் யூன் மாதம் முப்பதாம் திகதி (யூன் 30) வரைக்கும்.

(ii) வருடாந்த அனுமதிப்பத்திரமொன்றாகுமிடத்து உரிய வருடத்தின் திசெம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி (திசெம்பர் 31) வரைக்கும் செல்லுபடியானதாகும்.

8. (1) இத்துணை விதிகளின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் கட்டணத்திற்கு உட்பட்டதாக வேண்டும். அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குவதற்கு இயலுமென விண்ணப்பதாரிக்கு அறிவித்த பின், அவரினால் உரிய கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் மட்டுமே அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும்.

அனுமதிப்பத்திரக் கட்டணம்.

(2) மாதம் ஒன்றுக்கு ரூபா இருபத்தைந்து (ரூபா 25) வீதம் பன்னிரெண்டு மாதங்களுக்குமாக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா முன்னூறு (ரூபா 300) ஆகும். கட்டுப்பாட்டுக் குழுவின் விதப்புரையின்கீழ் சபையின் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்படுவதன் மூலம் காலத்திற்கு காலம் கட்டணத் திருத்துவதற்கு சபைக்கு இயலும். அவ்வாறு மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினத்தில் இருந்து அல்லது அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்வரும் தினம் ஒன்றில் இருந்து நடைமுறைக்கு வரவேண்டும்.

9. (1) ஏதாவதொரு அனுமதிப்பத்திரதாரரினால் இத்துணை விதிகளில் ஏதாவதொரு ஏற்பாடொன்று மீறப்பட்டுள்ள வேளையில் அல்லது முறிக்கப்பட்டுள்ள வேளையில் சபையின் தவிசாளரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது ஏதாவதொரு பொலிஸ் உத்தியோகத்தரினால் காரணத்தைக் குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்படும் நீதியான விசாரணை ஒன்றின் பின்னர் நிறுத்தப்படும் இடத்தில் இருந்து தற்காலிகமாக அகற்ற இயலும், இங்கு செல்லுபடியான அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றிருப்பது தடை ஒன்றாக இருக்கக்கூடாது.

(2) சபையின் தவிசாளரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் வேண்டுகோள் விடுக்கும் எல்லா சந்தர்ப்பத்திலும் பொறுப்பாளரினால் உரிய வாடகை முச்சக்கர வண்டிக்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் முன்வைக்கப்பட வேண்டும்.

10. (255 ஆவது அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச்சட்டத்திற்கு காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு இணங்க அத்துடன் நகரசபை கட்டளைச் சட்டத்தின் 153 (2) பிரிவுக்கு இணங்க இந்த துணை விதிகளை மீறியது தொடர்பாக அந்த மீறும் இணைந்த எந்தவொரு செயற்பாடுகள் அல்லது மேற்கொள்ளாமல் இருத்தலுக்காக ரூபா எழுநூற்றி ஐம்பது (ரூபா 750) இற்கு மேற்படாத தண்டம் ஒன்று அத்துடன் அம்மீறல் நடவடிக்கையை தொடர்ந்தும் மேற்கொண்டு சென்றால் உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றம் ஒன்றினால் அது தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அல்லது அந்த மீறும் செயற்பாட்டைக் கவனத்தில் கொண்டு வந்து தவிசாளரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் எழுத்துமூலமான அறிவித்தல் ஒன்று ஒப்படைக்கப்பட்ட பின்னர் மீறும் செயலானது தொடர்ந்தும் மேற்கொண்டு சென்ற ஒவ்வொரு தினம் ஒன்றுக்காகவும் ரூபா இருநூற்றி ஐம்பது (ரூபா 250) க்கு மேற்படாத மேலதிக தண்டம் ஒன்றுக்கு உட்பட்டாக வேண்டும்.

பொருள்கோடல்.

11. பதங்கள் சம்பந்தமாக வேறு விதமான பொருள்கோடல் அவசியப்படாலேயொழிய இத்துணை விதிகளில்:-

''நகர சபை'' என்பது (255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கொலன்னாவ நகர சபையும்,

''அதிகாரப் பிரதேசம்'' என்பது (255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் தாபிக்கப்பட்ட கொலன்னாவ நகர சபையின் அதிகாரப் பிரதேசமும்,

''தலைவர்'' என்பது கொலன்னாவ நகர சபையின் தலைவர் அல்லது அவரின் அதிகாரப் பொறுப்புக்களையும் கடமைகளையும் மேற்கொள்வதற்கு தற்காலத்தில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள நபரும்,

''அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்'' என்பது ஆணையாளரினால் எழுத்துமூலம் அதிகாரத்தை கையளித்துள்ள நகர சபையின் நிலையான பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரும்,

''பொலிஸ் உத்தியோகத்தர்'' என்பது (53 ஆம் அத்தியாயமான) பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவராக பொருள்கோடப்பட்டுள்ள எவரேனும் ஆள் ஒருவரும்.

''பொறுப்பாளர்'' என்பது, ஏதேனும் வாடகை முச்சக்கர வண்டி ஒன்றை தன்னாலேயே வாடகை பயணங்களுக்காக ஈடுபடுத்தும் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் அல்லது பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் விருப்பத்துடன் ஏதேனும் வாடகை முச்சக்கர வண்டியை வாடகை பயணங்களுக்காக பாவிக்கும் வேறு எவரேனும் ஆளொருவர்.

''அனுமதிப்பத்திரதாரர்'' என்பது இத்துணைவிதிகளின்கீழ் ஏதேனும் நிறுத்தி வைக்கும் இடத்தில் வாடகை முச்சக்கர வண்டி ஒன்றை நிறுத்தி வைப்பதற்கு அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொண்ட ஆளொருவரும்.

''வருடம்'' என்பது பஞ்சாங்க வருடம் ஒன்றாகவும்.

''வாடகை முச்சக்கர வண்டி'' என்பது, மற்றும் பயணிகள் மற்றும் பொருட்கள் வாடகைக்கு போக்குவரத்தில் ஈடுபடுத்துகின்ற மோட்டார் வாகனங்கள் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் முச்சக்கரவண்டியையும்.

''நிறுத்தி வைக்கும் இடம்'' என்பது மற்றும் பயணிகள் மற்றும் இத்துணைவிதிகளின் 2 ஆவது அட்டவணையின் கீழ் நகர சபையினால் வாடகை முச்சக்கரவண்டிகளை நிறுத்தி வைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடமும்.

''அனுமதிப்பத்திரம்'' என்பது இந்த துணைவிதியின் கீழ் எந்தவொரு நிறுத்தி வைக்கும் இடத்தில் வாடகை முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி வைப்பதற்கு வழங்கப்பட அனுமதிப்பத்திரமொன்றும்.

''ஆகக்கூடிய எண்ணிக்கை'' என்பது, 2 ஆவது அட்டவணையின் கீழ் ஏதேனும் நிறுத்தி வைக்கும் இடத்தில், நிறுத்தி வைக்க முடியும் என்று நகர சபை மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ள உச்ச வாடகை முச்சக்கர வண்டி தொகையும்.

''பிரசித்தி பெற்ற இடம்'' என்பது நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் உள்ள ஏதேனும் பொது வீதியொன்றில் வீதிக்கு ஒதுக்கப்பட்ட இடம் அல்லது ஏதேனும் வாய்க்கால் அல்லது ஆறு அல்லது

நீரோட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம், அல்லது ஏதேனும் அரச நிறுவனமொன்று அமைந்துள்ள வளவு அல்லது நகர சபைக்குச் சொந்தமான காணி அல்லது பொது மக்கள் ஒன்று கூடும் இடமும்.

“மோட்டார் வாகனம்” என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனப் போக்குவரத்து சட்டத்தின்கீழ் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள அதே அர்த்தமும்.

“வேறு வாகனம்” என்பது, (203 ஆம் அத்தியாயம்) மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள அதே அர்த்தமும் என்ற கருத்தாகும்.

12. இச்சட்டத்தின் சிங்களம் தமிழ் மொழிகளுக்கு இடையே ஒவ்வாமை ஒன்று ஏற்படுமிடத்து சிங்கள மொழியின் பதமே அதிகாரம் பெற்றதாக வேண்டும். ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழிப்பதமே அதிகாரம் பெற்றதாக வேண்டும் என்பது.

## முதலாவது அட்டவணை

### I ஆவது பகுதி

கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர்களாக இருக்க வேண்டியவர்களின் பதவிப் பெயர் பட்டியல் :-

1. நகர சபையின் தலைவர் (குழுவின் தலைவர்)
2. நகர சபையின் செயலாளர்
3. நகர சபையில் தற்போது பதவியை வகிக்கும் எல்லா அங்கத்தவர்களும்
4. நகர சபையின் வருமானப் பரிசோதகர்
5. வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தின் அத்துடன் கிரான்பாஸ் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் ஒரு பிரதிநிதி.
6. நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடங்களின் ஒரு தரிப்பிடத்திலிருந்து அந்த தரிப்பிடத்திற்கு உரிய சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரில் இருவர் வீதம் எல்லா தரிப்பிடங்களும் பிரதிநிதித்துவம் பெறுமாறு பிரதிநிதிகள்.

### II ஆவது பகுதி

கட்டுப்பாட்டுக்குழுவின் பொறுப்பு:-

* வாடகை முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கும் இடங்களை உருவாக்கலும் பராமரித்தல் பற்றிய விடயங்களை பரிசீலித்து அது சம்பந்தமாக சபைக்கு விதப்புரையைச் சமர்ப்பித்தல்.
* வாடகை முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கும் இடங்களில் நிறுத்தி வைக்கக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை மற்றும் நிறுத்தி வைக்கும் ஒழுங்கு பற்றிய விதப்புரைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்.
* காலத்திற்கு காலம் விண்ணப்பப்படிவக் கட்டணங்களை மாற்றுதல், விண்ணப்பப்படிவக் கட்டணங்களை மாற்றுவத தொடர்பான விதப்புரை அத்துடன் இந்த துணைவிதியின் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக விதப்புரையை சபைக்குச் சமர்ப்பித்தல்.
* ஏதாவது ஒரு அனுமதிப்பத்திரதாரர் ஒருவரினால் இத்துணை விதியின் ஏதாவது ஏற்பாடொன்று முறித்தல் வேளையில் அல்லது மீறப்பட்டுள்ள வேளையில் சபையின் தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது ஏதாவது ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் காரணத்தைக் குறிப்பிட்ட பின்னர் அது தொடர்பாக நீதியான விசாரணை ஒன்றை மேற்கொண்டு அறிக்கையினை சமர்ப்பித்தல்.

**இரண்டாவது அட்டவணை**

வாடகை முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் மற்றும் அத்தகைய ஒவ்வொரு இடங்களிலும் நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்கப்படும் ஆகக்கூடிய முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை

| | I ஆவது நிரல் நிறுத்தப்படும் இடம் | II ஆவது நிரல் வாடகை முச்சக்கர வண்டிகளின் அதிகபட்ச எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | .................................... | .................................... |
| 2. | .................................... | .................................... |
| 3. | .................................... | .................................... |
| 4. | .................................... | .................................... |
| 5. | .................................... | .................................... |

**மூன்றாவது அட்டவணை**

**நிறுத்தி வைக்கும் இடத்தில் வாடகை முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி வைப்பதற்கு அனுமதிப்பத்திரமொன்றைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரம்**

1. விண்ணப்பதாரியின் :-

(i) முழுப்பெயர் :----.
(ii) நிரந்தர வதிவிட முகவரி :----.
(iii) நிரந்தர வதிவிடம் அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனம் :----.
(iv) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
(அடையாள அட்டையின் போட்டோ பிரதி ஒன்றை இணைக்கவும்)
(v) செல்லுபடியான சாரதி உத்தரவுப்பத்திரம் இருப்பின் அதன் இலக்கம் :----.
(வாடகை முச்சக்கரவண்டி விண்ணப்பதாரியினால் செலுத்தப்படுமாயின், செல்லுபடியான சாரதி உத்தரவுப் பத்திரத்தின் புகைப்பட பிரதியொன்றை இணைக்கவும்)

2. வாடகை முச்சக்கர வண்டி :-

(i) பதிவுசெய்யப்பட்ட இலக்கம் :----.
(வாகனத்தின் பதிவு சான்றிதழின் புகைப்பட பிரதியொன்றை இணைக்கவும்)

(ii) வாடகைப் பயணங்களுக்காக வண்டியை ஓட்டுதல் உரிமையாளரா இல்லையேல் வேறொருவரா என்பது :----.

3. வாடகைப் பயணங்களுக்காக முச்சக்கர வண்டியை ஓட்டுதல் வேறொருவராயின் அவருடைய-

(i) முழுப்பெயர் :----.
(ii) நிரந்தர வதிவிட முகவரி :----.
(iii) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
(iv) செல்லுபடியான சாரதி உத்தரவுப்பத்திரம் இருப்பின், அதன் இலக்கம் :----.
(அனுமதிப்பத்திரத்தின் புகைப்பட பிரதியொன்றை இணைக்கவும்)

4. முச்சக்கர வண்டியின் வலது பக்கத்தால் ஏறி மற்றும் இறங்கும் வழி மூடப்பட்டுள்ளதா? ஆம்/இல்லை

5. அனுமதிபத்திரத்தைப் பெற்றுக்கொள்ள எண்ணியுள்ள நிறுத்தி வைக்குமிடம் விருப்ப ஒழுங்குமுறையின் அடிப்படையில்,

(i) .................................... (ii) ....................................

6. முன்னர் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் இருப்பின், அதன் செல்லுபடியாகும் காலம் முடிவுறும் திகதி : 20.......

7. அனுமதிப்பத்திரம் கோரும் முறை : அரையாண்டு அடிப்படை/வருடாந்த அடிப்படை

08. கொலன்னாவ நகர சபை அதிகார பிரதேசத்தினுள் வாடகை முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தலை ஒழுங்குபடுத்தும் மற்றும் கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைவிதிகள் என்னால் நன்றாக வாசித்தத் தெரிந்து கொண்டதாகவும், அத்துணை விதிகளின் ஏற்பாடுகளை கடைப்பிடிப்பதற்கு இணங்குவதாகவும் அதில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஏற்பாடுகள் என்னால் அல்லது எனது வாடகை முச்சக்கர வண்டியை ஓட்டுபவரால் தவறுதல் அல்லத மீறுவதன் மீது ஏற்படும் பிரதி விளைவுகளை நான் அறிவேன் என்பதாகவும் அது சம்பந்தமாக என்னுடைய வாடகை முச்சக்கர வண்டி ஓட்டுபவருக்கு விளக்கியுள்ளேன் என்பதாகவும், வெளிப்படுத்துகின்றேன். அவ்வாறே மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானதெனவும், அத்தகைய ஏதேனும் தகவல் பொய்யானதென உறுதிப்படுத்தப்பட்டால் எனக்கு அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்கப்படுவதை நிராகரிக்க சபையின் தலைவருக்கு அதிகாரம் உண்டென்பதையும் மற்றும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டால் விநியோகிக்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தை எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி செல்லுபடியற்றதாக்குவதற்கு சபையின் தலைவருக்கு அதிகாரம் உண்டென்பதையும் நான் அறிவேன் என மேலும் வெளிப்படுத்துகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : 20........

---

மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு ............... நிறுத்தி வைக்கும் இடத்தில் .................... இலக்கத்தைக் கொண்ட முச்சக்கர வண்டியை நிறுத்தி வைப்பதற்கு அரையாண்டு அடிப்படையில்/வருடாந்த அடிப்படையில்
* அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்க அனுமதியளிக்கின்றேன். ............... காரணத்தினால் அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதை நிராகரிக்கின்றேன்.

--------,
நிறுத்தி வைக்கும் இடத்திற்கு உரிய முச்சக்கர வண்டிச் சங்கத்தின் தவிசாளர், செயலாளர் அல்லது பொருளாளர் ஆகியோரில் ஒருவர்.

திகதி : 20..........

* தேவையற்ற சொற்களை வெட்டிவிடுதல்.

---

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு ...................... நிறுத்தி வைக்கும் இடத்தில் ............... இலக்கத்தைக் கொண்ட முச்சக்கர வண்டியை நிறுத்தி வைப்பதற்கு அரைவருட அடிப்படையில்/ வருடாந்த அடிப்படையில் *அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்க அனுமதியளிக்கின்றேன். ................. காரணத்தினால் அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதை நிராகரிக்கின்றேன்.

-----,
தலைவர்.

திகதி : 20..........

---

* தேவையற்ற சொற்களை வெட்டிவிடுதல்.

அறவிடப்பட்ட நிதி ரூபா ................. பற்றுச்சீட்டு இலக்கம் ...........................

வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் இலக்கம் : ..........................

திகதி : 20..........

-----,
விடயப்பொறுப்பு உத்தியோகத்தர்.

வாடகை முச்சக்கர வண்டிகள் அனுமதிப்பத்திரங்கள் பதிவேட்டின் .................... பக்கத்தில் ......................... இலக்கத்தின் கீழ் பதியப்பட்டுள்ளது.

திகதி : 20..........

-----,
விடயப்பொறுப்பு உத்தியோகத்தர்.

விண்ணப்பப்பத்திரத்தைப் பொறுப்பேற்றமைக்கு, இங்கு வெட்டி விண்ணப்பதாரரிடம் கையளிக்கவும்

வாடகை முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கும் இடத்தில் நிறுத்தி வைப்பதற்காக ............... இலக்கத்தைக் கொண்ட முச்சக்கர வண்டிக்கு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திரு./திருமதி/செல்வி ................................. சமர்ப்பித்த 20............. ஆந் திகதியிடப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தைப் பொறுப்பேற்றுள்ளேன். (நேரம் : மு.ப./பி.ப. ............... )

திகதி : 20..........

-----,
செயலாளர்.

**நான்காவது அட்டவணை**

**I ஆம் பகுதி**

உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கு தொடர்டைய நிபந்தனைகள் :

* முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கும் இடமொன்றில் நிறுத்தி வைப்பதற்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கையில், அந்த சந்தர்ப்பம் வரை கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பப்பத்திரங்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும்.

* அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தில் கேட்கப்பட்ட தகவல்கள் தொடர்புடைய பின்னிணைப்புக்களுடன் சரியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்காவிடின் நிராகரிக்கப்படல் வேண்டும்.

* அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் ஏதேனும் நிறுத்தி வைக்கும் இடத்திற்கு அருகாமையில் வதிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

* ஏதேனும் நிறுத்தி வைக்கும் இடத்திற்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் பணியின்போது சமமான தகைமைகளைக் கொண்ட சிலர் உள்ளவிடத்து, விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தின் அடிப்படையில் முன்னுரிமை கவனத்தில் எடுக்க வேண்டும்.

* வாடகை முச்சக்கர வண்டியின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் பெயரில் மாத்திரம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும்.

* அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக அவசியமான எவரேனும் ஆளொருவர், தற்போதைய அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம், முடிவுறுவதற்கு 14 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

* ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்றை புதுப்பிப்பதற்காக சமர்ப்பிக்கும் விண்ணப்பப்பத்திரம் தற்போதைய அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம், முடிவுறுவதற்கு 14 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்காவிடின், அச்சந்தர்ப்பம் வரை கிடைக்கப்பெற்ற புதிய விண்ணப்பப்பத்திரமொன்றெனக் கருதி ஏனைய விண்ணப்பப்பத்திரங்களுடன் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும்.

**II ஆம் பகுதி**

*அனுமதிப்பத்திரத்தின் மாதிரி*

**கொலன்னாவ நகர சபை**

அனுமதிப்பத்திர இலக்கம் : பற்றுச்சீட்டு இலக்கம் :

முச்சக்கரவண்டி தரிப்பிடத்தின் அனுமதிப்பத்திரம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | | கட்டணம் : | |
| வண்டியின் பதிவிலக்கம் : | | செல்லுபடியாகும் காலம் : | |
| தரிப்பிடம் : | | | |
| திகதி : | | | |

தலைவர்,
கொலன்னாவ நகர சபை.

பதினைந்து சென்றிமீற்றர் நீளம் மற்றும் பதினைந்து சென்றிமீற்றர் அகலத்தைக் கொண்ட சதுரம் ஒன்றாகும்.

பின்புறம் மஞ்சள் (Yellow Colour) அடையாள நிறத்திலான மற்றும் கறுப்பு எழுத்திலான மாதிரியின் விடயங்கள் அடங்கிய ஸ்டிக்கராகும்.

*1-272*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.